# ADM COURT, SANKARANKOVIL

**தேதி: 15/11/2021**

**அசல் வழக்கு எண்: 87/2014**

**வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியப்பிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை அளக்கும்போது சர்வேயர் உதவியுடன் இடத்தை அளந்தாரா என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை சர்வேயர் உதவியுடன் அளக்கவில்லை என்றால் சரியல்ல. சர்வேயர் உதவியுடன் புல எண்கள் சரியாக பூமியில் அடையாளம் கண்டு, தாவா சொத்துக்கள் எவை என்று நீதிமன்றத்திற்கு அடையாளம் தெரியும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள புஞ்செய் புல எண் என்று குறிப்பிட்டுதான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1-ல் 2,3 அயிட்ட சொத்துக்களுக்கு புஞ்செய் புல எண் என்று குறிப்பிட்டுதான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2-லும், புஞ்செய் புல எண் என்று சொல்லிதான் சொத்துக்களை கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 புல வரைபடமானது, நத்த வகைபாட்டில் உள்ள புல வரைபடம் என்றால் சரிதான். நத்த புல எண்ணுக்கும், புஞ்செய் புல எண்ணுக்கும் ஒப்பீடு செய்வதற்கான correlation statement தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நத்த புல எண்ணுக்கும், புஞ்செய் புல எண்ணுக்கும் ஒப்பீடு செய்து பார்ப்பதற்கு correlation statement அவசியம் என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த ரத்தினசாமி நாடார், நாடார் சமுதாயத்திற்காக வாங்கப்பட்ட 20.07.1965ம் தேதியிட்ட ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். மேற்கண்ட 20.07.1965ம் தேதியிட்ட ஆவணம் என்கைவசம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம்.

அந்த ஆவணத்தில் பாதை விபரம் சொல்லப்பட்டுள்ளதால், உண்மை நீதிமன்றத்திற்கு தெரிந்து விடும் என்ற காரணத்தால் அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் என் முன் கிரைய பத்திரமான 1965ம் வருட ஆவணத்திற்கு மாறாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள புல எண்களுக்கு நத்தம் தூய அடங்கல் சிட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் நான் எங்களுக்குரிய அடங்கல் சிட்டாவை தாக்கல் செய்துள்ளேன். அதை எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நத்தம் தூய அடங்கல் சிட்டாவை தாக்கல் செய்தால் வழக்கு எதிராக மாறும் என்ற காரணத்தினால் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.5ன்படி வட்டார வளர்ச்சி அலுவலர் மேலநீலிதநல்லூர் தாவா சொத்தை பார்வையிட்டு, அளவை செய்து, எவ்வித ஆக்கிரமிப்புகளும் இல்லை என்பதால்தான் வா.சா.ஆ.5ன்படியான நடவடிக்கைகள் கைவிடப்பட்டு விட்டது என்றால் சரியல்ல. நடவடிக்கை எடுக்கப்பட்டது. வா.சா.ஆ.4-லும், வா.சா.ஆ.5 சம்பந்தப்பட்டுதான் அதன்படி எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கணினி பதிவிறக்க அ பதிவேடு ஆவணம் ஆகும். இந்த ஆவணம் பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கணினி பட்டா எண்.4311. அது பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய பிராதில் தபசில் சொத்தின் நத்த புல எண் என்று காட்டிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் இருக்கும் இடம் எல்லாம் புஞ்செய்யாக இருந்து தற்போது நத்தமாக மாறியுள்ளது என்றால் சரிதான். நத்த புல எண்.140 மற்றும் புஞ்செய்புல எண்.196 மேற்படி புல எண்களில்உ ள்ள உட்பிரிவுகள் ஒன்றாக சேர்க்கப்பட்டு தற்போது, ஒரே புல எண்ணில், நத்தத்தில் புல எண்.196 மற்றும் அதன் உட்பிரிவுகளாக

பிரிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நத்த புல எண் மற்றும் புஞ்செய் புல எண் சரியாக ஒப்பீடு செய்து பார்க்காமல் இந்த வழக்கில் தவறான கட்சி செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு VAO. Talsidhar, Collector ஆகியோர் கட்சி சேர்த்து அவர்கள் புல எண்களின் அமைப்பு குறித்து அறிக்கை கொடுத்தால்தான் தெரிவிக்க முடியும் என்றால் ஏற்கனவே அறிக்கை கொடுத்துள்ளார்கள். மேற்சொன்ன நபர்கள் இந்த வழக்கில் பதில் தாக்கல் செய்தால்தான், உண்மை விபரம் தெரியும் என்றால் அவர்கள் சொன்னால்தான் தெரியும். மேற்படி நபர்களை இந்த வழக்கில் அவசிய கட்சியாக இருந்து அவர்கள் அவசிய கட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்தின் அமைப்பு பூமியில் இல்லை என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கையில் Q1,Q2,Q3,Q4 என்று காட்டப்பட்டுள்ள பகுதியில்தான் எங்கள் ஆவணங்களின்படி நடைபாதை அமைப்பு இருக்கிறது என்றால் எங்களுக்கு அந்த வழியில் இல்லை. கீழ் பக்கம் தான் நடைபாதை உள்ளது. நான் பிரஸ்தாபிக்கும் 2ம் தபசில் சொத்தை தகரம் வைத்து அடைந்து விட்டார்கள் என்றால் சரிதான். நான் தற்போது Q1,Q2,Q3,Q4 என்ற ஆணையர் அறிக்கையில் காட்டப்பட்ட பகுதி வழியாகதான் தற்சமயம் நடத்து வருகிறேன். பிரதிவாதிகள் மேற்கண்ட பாதையைதான் எங்களுக்கு சாஸ்வதகமாக பாதையாக அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட Q1,Q2,Q3,Q4 பாதை வழியாக நாங்கள் நடத்து வருவதை பிரதிவாதிகள் எவ்வித ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்கள் ஆவணங்கள்படி Q1,Q2,Q3,Q4 மேற்கண்ட பாதையை பிரதிவாதிகள் நாங்கள் நடப்பதற்கு எவ்வித இடைஞ்சலும், செய்யவில்லை என்றும், நாங்கள்தான் ஆவணத்திற்கு மாறுபட்டு பிரதிவாதிகளின் வீட்டின் ஊடாக பாதை அமைப்பு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கையில் Q4 என்று காட்டப்பட்ட பகுதியில் 3 1/2 அடிதான் பாதையாக உள்ளது. 4 1/2 அடி இல்லை. அந்த பகுதியில் 4 1/2 அடி

பாதைதான் உள்ளது. ஆணையர் அறிக்கையில் அதைதான் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பிராதில் 1ம் தபசில் 2ம் அயிட்ட சொத்தில் என் நடைபாதைக்கும் மேற்கு என்று சொல்லப்பட்டுள்ள மால் ஆணையர் அறிக்கையில் Q1,Q2,Q3 என்ற பகுதியாகும் என்றால் அந்த இடம்தான். ஆனால் பாதை கிடையாது. அந்த இடம் பாதையாக இருப்பதால்தான் என்னுடைய பிராதில் 1ம்தபசில் 2ம் அயிட்ட சொத்திற்கு நடைபாதைக்கும் மேற்கு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் வீட்டு கதவு எண்.224, 225 என்றால் சரிதான். நான் பிராதில் கோரியுள்ளவாறு, வலியுறுத்துக்கட்டளை பரிகாரமும், நீதிமன்ற ஆணையர் மூலம் நில அளவையர் சுற்றி காட்டப்படவில்லை என்பதால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்தை பொறுத்து கோரியுள்ள விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. பூமியில் முறையான பாதை அமைப்பு எனக்கு பிரதிவாதிகள் கொடுத்தும், நான் வீண் வம்புக்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் நான் பிரதிவாதிகளுக்கு இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. பிராதில் சொல்லப்பட்டுள்ள புல எண், சொத்து விபரம் தவறானது என்றால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**